## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
## &
## இந்திய வானிலைத்துறை
## வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (23.08.2023 முதல் 27.08.2023)

**அறிக்கைஎண் 067/2023** **தேதி.22.08.2023**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 18°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தின் கடந்தவார வானிலை**

ஈரோடு மாவட்டத்தின் 18.08.23 முதல் 21.08.23 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும் காலைநேரகாற்றின் ஈரப்பதம் 79 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 52 சதவிகிதமாகவும் பதிவானது. சுராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 19-22 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (18.08.2023 முதல் 21.08.2023) | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 27.08.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 18/08 | 19/08 | 20/08 | 21/08 | தேதி | நாள்-1 23/08 | நாள்-2 24/08 | நாள்-3 25/08 | நாள்-4 26/08 | நாள் 5 27/0 |
| 0.0 | 0.0 | 0.0 | 2.0 | மழை (மி.மீ) | 4 | 3 | 1 | 2 | 4 |
| 34 | 33 | 33 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 35 | 35 | 35 | 34 | 34 |
| 24 | 23 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 24 | 23 | 23 | 23 | 23 |
| 6 | 7 | 5 | 5 | மேக மூட்டம் (ஆக்டர்) | 7 | 6 | 4 | 5 | 7 |
| 78 | 75 | 79 | 79 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 61 | 52 | 57 | 55 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 30 | 30 | 30 | 40 |
| 21 | 22 | 21 | 19 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 8 | 10 |
| 230 | 230 | 200 | 230 | காற்றுவீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 270 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (23.08.2023 முதல் 27.08.2023)**

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34°செ முதல் 35°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23°செ முதல் 24°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின்

வேகம் மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென்மேற்கு திசைவரைவீசக்கூடும்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு

| தேதி | அம்மாபேட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 23-08-2023 | 6.0 | 4.0 | 3.0 | 6.0 | 3.0 | 2.0 | 4.0 | 7.0 | 3.0 | 4.0 | 3.0 | 5.0 | 5.0 | 5.0 |
| 24-08-2023 | 1.0 | 1.0 | 1.0 | 2.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 1.0 | 0.0 | 1.0 |
| 25-08-2023 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 26-08-2023 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| 27-08-2023 | 2.0 | 2.0 | 2.0 | 7.0 | 2.0 | 2.0 | 3.0 | 2.0 | 2.0 | 3.0 | 2.0 | 5.0 | 4.0 | 4.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | அடுத்த 5 நாட்களுக்கு இலேசான தூறலுடன் காற்றின் வேகம் மணிக்கு 8 -16 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. கோவை மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அதிகபட்சமாக காற்றின் வேகம் மணிக்கு 16 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |
| நெல் | விதைப்பு | மழை எதிர்பார்க்கப்படுவதால் சம்பா பருவ மத்திய கால நெல் இரகங்களுக்கு மேட்டுப்பாத்தியின் மூலம் நாற்றாங்கால் அமைக்கவும். |
| மக்காச்சோளம் | விதைப்பு | பெறும் மழையை பயன்படுத்தி மக்காச்சோளத்ததை இறவையில் விதைக்க உகந்த காலமாகும். மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |
| நிலக்கடலை | பூக்கும் பருவம் | காற்றின் ஈரப்பதம் அதிகமாக காணப்படுவதால் நிலக்கடலையில் டிக்கா இலைப்புள்ளி நோய் வரவாய்ப்புள்ளது. விவசாயிகள் வயலை நன்கு கண்காணித்து தாக்குதல் காணப்பட்டால் ஒரு எக்டருக்கு கார்பன்டெசிம் 500 கி அல்லது மான்கோசெப் 1000 கி என்றளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தவும். |
| கரும்பு | | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |
| பருத்தி | விதைப்பு | எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி பருத்தியினை விதைக்கலாம். மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |
| கொடி பூசணி | விதைப்பு | மழைப்பருவம் ஆரம்பித்துவிட்டதால் ஆடிப்பட்டம் கொடிவகை |

| | | |
|---|---|---|
| வகைகள் | | பயிர்களை விதைப்பதற்கு உகந்த காலமாகும். |

| | | |
|---|---|---|
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 8-10 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். |
| கால்நடை | | காற்றின் வேகம் அதிகமாக காணப்படுவதால் கோழிகளின் தீவனங்கள் சிதற வாய்ப்புள்ளது. எனவே காற்றின் வேகத்தை குறைக்க கோழிக்கூடாரங்களில் சுற்றிலும் சாக்கு பைகளை தொங்கவிடவும்.<br>தற்போது நிலவும் வானிலையால் கால்நடைகள் நாவறட்சியால் அதிக தண்ணீர் அருந்த வாய்ப்புள்ளது. எனவே போதுமான அளவு சுத்தமான குடிநீரை கால்நடைகளுக்கு வழங்கவும்.<br>கறவை மற்றும் உழவு மாடுகளில் வாய் மற்றும் கால் குழம்புகளை கோமாரி நோய்க்காக பரிசோதனை செய்யவும். |

**குறுஞ்செய்தி**

- எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி பருத்தியினை விதைக்கலாம். மண் ஈரத்தினைப் பொறுத்து நீர்பாசனம் செய்யவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**